[3rd September 1958

ஒரே நாளில் டோகனேயும் பணத்தையும் வாங்குவதற்கு ஏற்ற வகையில் ஸ்டேட் பாங்குக்கு உடனுக்குடன் தகவல் தெரிவிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கஷ்டத்தைத்தான் மற்ற கனம் அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். இதை நிவர்த்திக்க என்ன ஏற்பாடு செய்வது என்று யோசிக்கப்படும்.

Poramboke lands

*15 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி ஜில்லா, விளவங்கோடு தாலூகா, கலியல் ரேஞ்சு குலப்பாரையிலுள்ள புறம்போக்கு நிலங்களில் சாகுபடி செய்துகொண்டிருந்த விவசாயிகள் எவரேனும் பனிச்சமுட்டிலுள்ள கான்வெண்ட் அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டார்களா ?

(ஆ) விவசாயிகள் சட்டத்தை மீறி நிலங்களை ஆக்கிரமித்தார்கள் என்பதற்காகவும் அத்துமீறி அவற்றில் பிரவேசித்தார்களென்பதற்காகவும் தொடரப்பட்ட வழக்குகளில் எத்தனை பைசலாகமல் உள்ளன ?

(இ) மேற்படி புறம்போக்கு நிலங்களை மீண்டும் ஸர்வே செய்து அவற்றை நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு ஒப்படை செய்வதற்கான உத்தேசம் ஏதாவது இருக்கிறதா ?

(ஈ) அப்படியானால், அதுபற்றி விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) No encroachment cases have been filed for unauthorised occupation in the area.

(*c*) & (*d*) There is no proposal to resurvey the poramboke land in question at present.

Green fodder

* 16 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Municipalities where drainage water is used to raise green fodder; and

(*b*) whether the Government propose to extend the scheme to all Municipalities?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Thirteen including the Corporation of Madras.

(*b*) This question is under consideration.

SRI S. LAZAR : இப்படிப்பட்ட சாக்கடைகள் திருச்சிபோன்ற நகரங்களில் காவிரி ஆற்றில் கலந்துவிடுவதன் காரணமாக மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகையால் திருச்சி போன்ற நகரங்களிலாவது இந்தத் திட்டத்தை அமல் நடத்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டம் இப்போது ஸ்ரீரங்கத்தில் அமலுக்கு வந்திருக்கிறது. இதை திருச்சியில் கொண்டு வருவதுபற்றி பிற்பாடு ஆலோசிக்கப்படும்.

3rd September 1958]

SRI K. VINAYAKAM : This kind of disposal of sewage water is known as 'talatti'. This scheme has not been implemented in the western part of the City of Madras, namely, Erukancheri. Did the Corporation of Madras apply for a loan for this purpose and if so, why the loan has not yet been sanctioned to the Corporation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice, Sir. I would however like to say that the Madras Corporation had already taken up this scheme.

Tourist centre

* 17 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கொடைக்கானலை டூரிஸ்ட் ஸென்டர் ஆக்க சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes.

SRI A. R. SUBBIAH MUDALIAR : தென்காசிக்குப் பக்கமுள்ள குற்றாலம் "டூரிஸ்ட் ஸென்டர்" ஆக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். ஆனால் இன்று வரையில் அங்கே ஒருவிதமான அபிவிருத்தி வேலையும் நடக்காததற்குக் காரணம் என்ன ? அங்கே கூடிய சீக்கிரம் அபிவிருத்தித் திட்டத்தை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : மூலக் கேள்வி கொடைக்கானலைப்பற்றியது. தென்காசிக்கும் கொடைக்கானலுக்கும் ரொம்ப தூரம் இருக்கிறதே ;

SRI S. NAGARAJA MONIGAR : கொடைக்கானல் ஒன்று மாத்திரம் தான் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா ? இந்த ராஜ்யத்தில் இன்னும் எத்தனை "டூரிஸ்ட் ஸெண்டர்" கள் இருக்கின்றன என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் பல இடங்கள் இருக்கின்றன

Licences for firearms

* 18 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government propose to liberalize the rules governing the issue of licences for firearms?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'Arms' is a Union subject and this Government have no information whether there are any proposals at present for liberalizing the provisions governing the issue of licence for firearms.

SRI A. A. RASHEED rose.

MR. SPEAKER : When the subject is a Central subject, what more questions does the hon. Member propose to ask?

SRI A. A. RASHEED : Have the Government received instructions from the Union Government for the liberal grant of licences for firearms?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are still discussions between the Centre and the State Government in these matters.